[2013 ஏப்ரல் 25

309—

பருத்தி ஆராய்ச்சி நிலையம்

***17521—திரு. எஸ்.ஆர் பார்த்திபன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொளத்தூரில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், கொளத்தூரில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோவை, ஸ்ரீவில்லிபுத்தூர், பெரம்பலூர், வேப்பந்தட்டை போன்ற இடங்களிலே பருத்தி ஆராய்ச்சி நிலையங்கள் இருந்தாலும், சேலம் மாவட்டத்திலே ஆத்தூர், வாழப்பாடி, கொளத்தூர், கொங்கணாபுரம் போன்ற இடங்களில் உள்ள வேளாண் விற்பனை நிலையங்கள்மூலம் சுமார் 3,500 ஏக்கரிலே விளையும் பருத்தியானது, ஆண்டுக்கு ரூ.100 கோடிக்கு மேல் விற்பனையாகிறது. இந்த நிலையிலே சேலம் மாவட்டத்தை மையமாக வைத்து தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, நாமக்கல் போன்ற மாவட்டங்களை உள்ளடக்கி ஒரு பருத்தி ஆராய்ச்சி நிலையம் உருவாக்கித் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பருத்தி குறித்த ஆராய்ச்சிகள், கோவை பிரதான ஆராய்ச்சி*

2013 ஏப்ரல் 25]

மையத்திலும், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஆகிய இடங்களில் தற்போது நடைபெற்று வருகிறது. இதைவிட மானாவாரி பருத்தி அதிகம் பயிரிடப்படும் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி மற்றும் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களிலும் பருத்தி குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பருத்தி ஆராய்ச்சி நிலையங்கள் மூலமாகக் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில் பருத்தி அதிகம் பயிரிடப்படும் தென் மாவட்ட விவசாயிகளுக்கும் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்ட விவசாயிகளுக்கும் பூச்சிநோய்க் கட்டுப்பாடு, உர மேலாண்மை போன்ற தொழில்நுட்ப விவரங்களும் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சேலம் மாவட்ட விவசாயிகள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, சேலம் மாவட்டம், கொளத்தூரில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் தனியாக அமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பருத்தி ஆராய்ச்சி மையம் சேலம் மாவட்டத்திலே இனிவரும் காலங்களிலே தொடங்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால் பல தனியார் கம்பெனிகள் தயார் செய்கின்ற பருத்தி விதைகளைக் கொண்டு விவசாயம் செய்கின்றபோது உத்தரவாதம் இல்லாத பருத்தி விதைகளைக் கொண்டு விவசாயம் செய்யப்பட்டு, அதனால் விவசாயிகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதன் மூலமாக அரசு தரமான வீரிய ரக ஒட்டு பருத்தி விதைகளைத் தயார் செய்து, விவசாயிகளுக்கு வழங்குவதன்மூலம் பருத்தி உற்பத்தியும் அதிகரிக்கும், விவசாயிகளின் நலனும் பாதுகாக்கப்படும். எனவே, எதிர்காலத்திலாவது அத்தகைய விதைகள் கிடைக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமெனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து செயல்படும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம், தென் மாநிலங்களுக்காக ஒட்டுமொத்த தொழில்நுட்பங்களுக்கான ஆராய்ச்சிகளையும் பருத்தி பயிர் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இது தவிர, கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலே கோவை மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களுக்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, கோவை மண்டலத்துக்குள் வரும் சேலம் மாவட்டத்தில் பயிரிடும் பருத்திப் பயிருக்கான தொழில்நுட்ப விவரங்களையும் பல்வேறு ஆராய்ச்சிக்கான விவரங்களையும் இந்த ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் பெற முடியும். எனவே, சேலம் மாவட்டம், கொளத்தூரில் தனியாக ஒரு பருத்தி ஆராய்ச்சி நிலையம் தொடங்கவேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து இதை வலியுறுத்தியதன் அடிப்படையிலே, அப்படி தேவையா என்பதைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி செய்து, அப்படி தேவையிருப்பின் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அவரது கோரிக்கை எடுத்துச் செல்லப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 310, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

310—

கூட்டுறவு மேலாண்மை நிலையம்

***17287—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூரிலுள்ள தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS